# Peerkam Poo in Sangam Literature

**P. Thiravidamani**

*Associate Professor, Department of Tamil*
*Kunthavai Naacchiyaar Government Arts College for Women, (Auto), Thanjavur*
*Tamil Nadu, India*

***Article History***

**Received:** 23.06.2024

**Accepted:** 20.07.2024

**Published:** 30.07.2024

**Corresponding Author**
Dr. P. Thiravidamani

**Email Id:**
manisarann@gmail.com

**Citation:**
Thiravidamani, P. "Beerkam Boo in Sangam Literature." *Journal of Tamil Culture and Literature*, vol. 4, no. S1, 2024, pp. 6–9.

***Abstract***

*Flowers are integral to the lifestyle of the Tamil people. The different regions in Tamil literature, such as Kurinji, Mullai, and Neythal, are named after flowers. Among the flowers that bloom on trees, shrubs, and creepers, the Peerkam flower is associated with creepers. It is scentless and blooms in yellow. This flower typically blossoms in the evening and grows by spreading over fences. It is also referred to as Peer and Peeram. Sangam poets have compared the yellow hue of the Peerkam flower to the pallor that spreads over the heroine's body due to the sorrow of separation.*

***Keywords: Peer, Peeram, Peerkam, Yellow Flower, Creeper, Pallor.***

***References***

1. *Ainkurunooru, Moolamum Vilakavuraiyum, Marutham, Neithal, Olavai S.Duraisamy Pill I (Text), Annamalai University Publication, Chidambaram, 1957.*
2. *Sanga Illakiyam, NCPH Publication, Chennai 98, 2004.*
3. *Pathinen keezhikanakkunoolgal, Student Publication, Chennai, 2014.*
4. *Bharathidasan, Bharathidasan Kavithaikal, Pumbukar Publication, Chennai -8*
5. *Tholkappiyam ezhuththathikaram , Elampooranar Urai, Saratha , Publication, Chennai .*

# தமிழ் இலக்கியங்களில் பீர்க்கம் பூ

*முனைவர் பொ. திராவிடமணி*
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக்கல்லூரி (தன்), தஞ்சாவூர்

**ஆய்வுச்சுருக்கம்**

*மலர்கள் தமிழர் வாழ்வியலோடு தொடர்புடையவை. ஐவகை நிலங்களில் குறிஞ்சி, முல்லை, நெய்தல் போன்ற திணைகள் மலரின் பெயரால் அமைந்தவை. மரம், செடி, கொடிகளில் பூக்கும் மலர்களில் பீர்க்கம் மலர் கொடி வகைமைச் சார்ந்தது. மணமற்றது. மஞ்சள் நிறத்தில் பூக்கும் இது மாலை நேரத்தில் பூக்கும் இயல்புடையது. வேலிகளில் படர்ந்து வளர்வது. பீர், பீரம் என்றும் குறிப்பிடப்படுகிறது. சங்கப் புலவர்கள் பிரிவுத்துயரால் வருந்தும் தலைவியின் உடலில் படரும் பசலைக்குப் பீர்க்கம் மலரை உவமையாகச் சுட்டியுள்ளனர்*

***முக்கியச்சொற்கள்:*** *பீர், பீரம், பீர்க்கம், மஞ்சள் நிறப்பூ, கொடிவகை, பசலை*

**தமிழே, நீயோர் பூக்காடு நானோர் தும்பி**

*என்றார் பாரதிதாசன். உண்மைதான் தமிழையும் பூக்களையும் பிரித்தறியமுடியாது என்று சொல்லும் அளவிற்குத் தமிழ் இலக்கியங்களில் பூக்களின் மணங்கள் பரவியுள்ளன.*

*மலர்கள், மண்ணின் அடையாளம். அவை இயற்கையின் சூழல்களுக்கு ஏற்ப தன்னைத் தகவமைத்துக்கொண்டு வாழும் இயல்புடையவை. தமிழ் இலக்கணங்கள் அகத்திணைகளில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகை நிலங்களுக்கும் சுட்டப்பட்டுள்ள பெயர்களில், குறிஞ்சி, முல்லை, நெய்தல் என்ற மூன்றும் மலர்களின் பெயரால் அமைந்தவை அதே போன்று புறத்திணைகளில் வெட்சி கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை, வாகை போன்ற திணைகள் பூக்களின் பெயரால் அமைந்தவை . பூக்களில் பல, தன் நிலமல்லாத பிற நிலங்களில் வாழும் இயல்பைப் பெற்றிருந்தாலும் சில மலர்கள் அந்நிலத்தில் மட்டுமே உயிர்க்கும் தனித்தன்மையுடன் விளங்குகின்றன. வழிபாட்டிலும், வாழ்வியல் சடங்குகளிலும், உணவுப் பொருட்களிலும், மருத்துவத்திலும், ஒப்பனையிலும், எனத் தமிழர் வாழ்வியலில் நீக்கமற நிறைந்திருக்கும் பூக்களில் பீர்க்கம் பூ குறித்து இலக்கியங்களின் வழி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.*

## பூக்களின் அமைப்பும் குணமும்

*நனை, அரும்பு, முகை, போது, மலர்,, அலர், வீ என ஏழு பருவங்களையும், பாம்பு, புல்லி, அல்லி, சூலகம், மகரம், தாது, தேன் என ஏழு உறுப்புகளையும், மணம், மென்மை, வண்ணம், தூய்மை, தண்மை, சுவை, ஒளி எழில், கவர்ச்சி, மங்கலத் தன்மை எனப் பத்து குணங்களையும், கோட்டுப் பூ, கொடிப் பூ, நிலப் பூ, நீர்ப் பூ எனக் குடும்ப வகை நான்கையும், இதழ், அதழ், கோடு, ஏடு, மடல், தளம், பாளை என பூ இதழ் வகை ஏழையும், கொத்து, தொத்து, துணர், இணர், மஞ்சரி, தொடர்ச்சி, குலை எனப் பூங்கொத்து வகை ஏழையும் தமது அமைப்பாகவும் குணமாகவும் பூக்கள் கொண்டிருக்கின்றன என்று சிலம்பொலி சு. செல்லப்பன், இலக்கியம் ஒரு பூக்காடு எனும் நூலின் அணிந்துரையில் குறிப்பிட்டுள்ளார். இத்தகைய அமைப்புகளையும், குணங்களையும் உடைய பூக்களில் கொடிப் பூ வகைமையைச் சேர்ந்த பீர்க்கம் பூ.*

**பீர்க்கம் மலர்**

*பீர்க்கம் பூ. மாலை நேரத்தில் பூக்கும். வெள்ளரி இனத்தைச் சார்ந்தது. பொன் போன்ற மஞ்சள் நிறத்தில் காணப்படும் இப்பூ மணமில்லாதது. சிறிய பூவாகப் பூக்கும் இயல்புடையது. இதன் பிள்ளைப் பெயர் பீர் என்பதாகும். இதனை*

***பீர் என் கிளவி அம்மொடுஞ் சிவணும்***

***(தொல் எழுத்து :366)***

*என்கிறது தொல்காப்பியம். பீர் என்பது பீரம், பீர்க்கம் என்று ஆயிற்று. இக்கொடிப்பூவின் இயல்புகளைச் சங்க இலக்கியங்கள் பல பாடல்களில் பதிவு செய்துள்ளன. இது கொடிவகையைச் சார்ந்தது. புதர்களில் படரும் என்பதை ஐங்குறுநூறு*

***இவர்கொடிப் பீரம் இரும்புதல் மலரும்***

***(ஐங்குறு 464:2)***

*என்கிறது. மழைக் காலத்தில் பூக்கும் இயல்பை*

***மாரிப் பீரத்தலர் (குறுந் :98 5)***

***கார்தோன்றப் பீர் தோன்றி (திணை.மா :100)***

*என்றும், முன்பனிக் காலத்தில் அருகிப் பூக்கும் தன்மையை*

***பீரம் இரும்புதல் மலரும் அற்சிரம்(ஐங்குறு :4643)***

*பொன்போன்ற நிறத்தையுடையது என்பதை*

***பொன்போல் பீரம் (நெடு :14)***

***பொன்னென இவர்கொப் பீரம் (ஐங்குறு :464)***

***பொன்புனைப் பீரத்தலர் (ஐங்குறு :452)***

*என்றும் பதிவு செய்துள்ளன. இப்பூவில் மணமில்லை என்பதையும் தலைவிக் கூற்றின் வாயிலாக நற்றிணை 277 வது பாடலில் தும்பிசேர் கீரனார் பதிவு செய்துள்ளார்.*

***மனை உறக் காக்கும் மாண்பெருங் கிடக்கை***
***நுண்முள் வேலித் தாதொடு பொதுளிய***
***தாறுபடு .பீரம் ஊதி வேறுபட***
***நாற்றம் இன்மையின் பசலை ஊதாய்***

***(நற்றிணை 277: 5-8)***

*தும்பியே, என் வீட்டைப் பாதுகாக்கும் முள்வேலியில் படர்ந்துள்ள பீர்க்கம் பூவை ஊதிஅதிலுள்ளத் தேனைப்பருகினாய். ஆனால் ஏன் முகம் சுளித்தாய்? தேன் சுவைத்தாலும் அப்பூவில் மணம் இல்லாததால் முகம் வேறுபட்டாய் என்பதை நான் அறிவேன்.. நீ ஒன்று செய்திருக்கலாம், எம் உடம்பில் படர்ந்துள்ள பசலையை ஊதியிருக்கலாம். மணத்தில் மகிழ்ந்திருப்பாய் என்பது பொருள்*

*காதலன் பிரிவால் துயருற்ற தலைவி சரியாக உண்ணாமல், உறங்காமல் உடல் தளர்வுற்றுக் காணப்படும் நிலையில், அவள் உடலில் மலர் போல தேமல் படர்ந்திருக்கும். இதனைக் காண்பதற்குப் பீர்க்கம் மலர் போல் தோன்றும். உடல் பசந்து தோன்றுவதால் இது பசலை எனப்பட்டது. இதனை நுட்பமாகக் கண்ணுற்ற சங்கப் புலவர்கள் பல பாடல்களில் தலைவியின் உடல் படர்ந்த பசலையைப் பீர்க்கம் மலருடன் ஒப்பிட்டுக் குறிப்பிட்டுள்ளனர். இதனை*

***நுதலே***
***பீர்இவர் மலரிற் பசப்பூர்ந் தனவே***

***(நற்றிணை 197 :1-2)***

*என்றும்,*

***ஊரலர் தூற்றும் உய்யா விழுமத்துப்***
***பீர்அலர் போலப் பெரிய பசந்தன (கலி 149:48-49)***

*என்றும் வந்துள்ள பாடல்களின் அடிகளால் அறியலாம். பீர்க்கம் மலர் அழகுதான். ஆனால் அதன் வடிவொத்த பசலை பெண்களின் பிறை போன்ற அழகிய நெற்றியில் படரந்திருக்குமால் அது அவள் வனப்பைக் கெடுக்கும் என்கிறார் நல்லந்துவனார்.*

***..நறுநுதல்***
***பீரலர் அணிகொண்டு பிறைவனப்பு இழந்தது***

***(கலித்தொகை 53:14-15)***

*என்கிறார்., வேலியில், கொல்லையில், காடுகளில், புதர்களில் பீர்க்கம் கொடி படரலாம், ஆனால், மனையிலும், மன்றிலும் முளைத்துப் படரக்கூடாது, அவ்வாறு முளைத்துப் படருமானால் அதனை பாழ்மனை என்கிறது சங்க இலக்கியம்.*

***முனைகவர்ந்து கொண்டெனக் கலங்கிப் பீர்எழுந்து***
***மனைபாழ் பட்ட (அகநானூறு 373 :1-2)***

*என்றும்,*

***ஊர்எழுந்து உலறிய பீர்எழு முதுபாழ்***

***(அகநானூறு 167:10)***

*என்றும்,*

***சிற்றில் ஆங்கண்***
***பீரை நாறிய (புறநானூறு 116: 5-6)***

*என்றும் இடம்பெற்றுள்ள சங்க இலக்கியப் பாடல் அடிகள் அதனைப் புலப்படுத்தும். பீர்க்கம் மலர் சூடிக்கொள்ளும் தகுதியற்றது. என்றாலும் குறிஞ்சிப்பாட்டில் தலைவி சேகரித்த மலர்களில் பீர்க்கமும் இடம்பெற்றிருந்ததாகப் கபிலர் குறிப்பிட்டுள்ளார்.*

***பாரம், பீரம்,பைங்குருக் கத்தி***

***(குறிஞ்சிப்பாட்டு :93)***

*இவ்வாறாகப் பீர்க்கம் மலர் குறித்த செய்திகளைச் சங்க இலக்கியப் பாடல்களின் அறியமுடிகிறது. பீர்க்கம் மலர் காதலர் பிரிவால் வாடும், துயரடையும் தலைவியின் உடலில் படர்ந்த பசலைக்கு உவமையாக வந்ததன் காரணமாகவே சிறப்புப் பெற்றது எனலாம்.*

**நெறிநின்ற நூல்கள்**

1. *ஐங்குறுநூறு, மூலமும் விளக்கவுரையும், மருதம், நெய்தல், ஔவை. சு. துரை சாமிப்பிள்ளை (உ.ஆ) அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு. சிதம்பரம். மு.ப.1957,*
2. *சங்க இலக்கியம் , நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், சென்னை 98*
3. *பதினெண்கீழ்க்கணக்கு, மாணவர் பதிப்பகம், சென்னை -7*
4. *பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள, பூம்புகார் பதிப்பகம். சென்னை-8*
5. *தொல்காப்பியம் எழுத்ததிகாரம் - இளம்பூரணர் உரை, சாரதா பதிப்பகம், சென்னை*